

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மதுரவாயல், நொளம்பூர் மற்றும் முகப்பேர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் சன்னதி முதல் குறுக்குத் தெருவில் கூவம் ஆற்றின் குறுக்கே பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் 31.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), மண்டலக்குழுத் தலைவர் வே.ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு வனத்துறையின் சார்பில் புதுக்கோட்டை வனக்கோட்டத்தின் கீழ் பசுமை தமிழ்நாடு இயக்க தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வன அலுவலர் எஸ்.கணேசலிங்கம், அரசு பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ஜி.விமலா, வனச்சரக அலுவலர் மு.சதாசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில்

# மீன்வளம் - மீனவர் நலத்துறையில் 38 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப்.28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் 38 நபர்களுக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 18 நபர்களுக்கும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் 6 நபர்களுக்கும் என மொத்தம் 62 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 23 மீன்துறை சார் ஆய்வாளர், 12 உதவியாளர் மற்றும் 3 இளநிலை கணக்காளர் ஆகிய பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொழிற்நுட்பர் (இயக்குபவர்) பணியிடத்திற்கு 15 நபர்களும், விரிவாக்க அலுவலர் நிலை1 பணியிடத்திற்கு 3 நபர்களும் என மொத்தம் 18 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். நியமனம் செய்யப்பட்ட 18 நபர்கள் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரிவர்.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (Scheduled Tribe) சிறப்பு நியமனம் அடிப்படையில் 2 உதவிப் பேராசிரியர், 1 பண்ணை மேலாளர் (Farm Manager), 3 குறிப்பான் (Marker), என மொத்தம் 6 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் டாக்டர் ந. சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை இயக்குநர் க.வீ. முரளீதரன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் மற்றும் துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் இர. நரேந்திரபாபு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர்.செப்.28.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், நாளை (29.09.2025 திங்கள் கிழமை) காலை 10:00 மணியளவில் கும்பகோணம், சாரங்கபாணி தெற்கு வீதி, மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 01. “SIR” சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து. 2. வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல். 3. கழக ஆக்கப் பணிகள். இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 5**

ம. அ. 5. ந. க. எண். இ2/618/2025 — **குறுகிய கால ஒப்பம்**

குறுகிய கால மறு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரப்படுகிறது.

**புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி ஜீல்ஸ் சாலை, ஆசிர்வாதபுரம் வ.உ.சி சாலை மற்றும் மாநகர சென்னை நடுநிலைப்பள்ளி போர்துகீஸ் தெருவில் வார்டு எண்கள். 56,55 மற்றும் 57ல் கட்டும் பணிக்கு**

| | |
|---|---|
| **பணியின் மதிப்பு குறைந்த பட்சம் 61.62 இலட் சங்கள் முதல் அதிகபட்சம் 1.63 கோடி வரை** | **முன்வைப்புத் தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%** |

ஒப்பந்த புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம்: **06.10.2025 03.00** மணி வரை
ஒப்பந்த புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **07.10.2025 03.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5404 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **உதவி ஆணையர் ம. 5**


### அரியலூர் மாவட்டம் வாரணவாசி கிராமத்தில்

# மருதையாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டும் பணி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், செப். 28 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், வாரணவாசி கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே ரூ.24.36 கோடி மதிப்பீட்டில் புதிய தடுப்பணை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா கலந்து கொண்டார்.

புதிய தடுப்பணை கட்டும் பணிகளை துவக்கி வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது:

அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி விவசாயிகளுக்கு நீர்தேக்கி தரவேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் தேதி அரியலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்த போது புதிய தடுப்பணை கட்டுவதற்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த நிகழ்ச்சியில் உரையாற்றுகின்ற போது மாவட்ட மக்களும், மாவட்ட அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களும் வைத்த கோரிக்கையை ஏற்று இந்த தடுப்பணை கட்டப்படும் என அறிவித்தார்கள். அதற்கு பிறகு இதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூபாய் 24 கோடியே 36 இலட்சம் அளவில் தடுப்பணை கட்டுவதற்கு நிர்வாக அனுமதி தரப்பட்டது. அதற்கான அரசாணை 11.04.2025 அன்று வெளியிடப்பட்டது. புதிய தடுப்பணை கட்டுவதற்கு பணிகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற மருதையாறு அரியலூர் மாவட்டம் வழியாக செல்கிறது. கிட்டதட்ட பச்சமலையில் உற்பத்தியாகி இங்கு வருகின்ற போது இடையே சில காட்டாறுகளும் சேர்ந்து பெரும் அளவில் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடுகின்ற தண்ணீரை தேக்குவதன் மூலம் சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற சுமார் 400 ஏக்கர் நிலபரப்பு நீர் வசதி பெற இயலும். இத்தடுப்பணை இப்பகுதி விவசாயிகளுக்கு பெரும் உறுதுணையாக இருக்கும். இப்பகுதி விவசாயி கள் மற்றும் விவசாய சங்கங்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். கடந்த 2024 ஆம் ஆண்டு அறிவித்த திட்டம் ஏப்ரல் 2025 மாதம் அரசாணை வெளியிடப்பட்டது.

ஒரு அரசு திட்டத்தினை அறிவிக்கும் போது அதனை நிறைவேற்ற அரசு நடைமுறைகள் இருக்கின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு திட்டத்தினை அறிவித்தப் பிறகு அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான காலகட்டம் இருக்கிறது. அதன் பிறகு இதற்கான அரசாணை வெளியிடப்படும். அரசாணை வெளியிடப்பட்ட பிறகு அந்த துறை மூலமாக டெண்டர் கோரப்படும். டெண்டர் கோரியதில் குறைவான தொகையில் விண்ணப்பித்தவர்களை அழைத்து ஒப்பந்தம் வழங்கப்பட்டு அந்த பணி துவங்கப்படும். இது ஒரு அரசினுடைய நடைமுறை. மேலும், பெரிய அளவிலான பேருந்துகள் இயக்கப்பட முடியாத இடங்களில் மாற்று வழிமுறைகள் குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு கட்டமாக அதற்கான அறிவிப்புகள் வெளியிடப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும், மருதையாறு கொள்ளிடம் ஆற்றின் ஒரு துணை ஆறாகும். இந்த ஆறு பெரம்பலூர் மாவட்டம் தம்பிரான்பட்டி கிராமம் அருகே பச்சமலைமலைத்தொடரின் கிழக்குப்பக்க சரிவில் தோன்றுகிறது. மருதையாறு பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் 70.40 கி.மீ. நீளத்தில் பாய்ந்து அரியலூர் மாவட்டம் முத்துவாஞ்சேரி கிராமம் அருகே கொள்ளிடம் ஆற்றில் கலக்கிறது. மருதையாறு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை காலங்களில் நீர்வரத்து பெறுகிறது. மேலும், துறைமங்கலம் ஏரி உபரிநீர், மூங்கில்பாடி ஓடை, எலந்தங்குழி ஓடை, சாத்தானூர் ஓடை, சம்பா ஓடை, வஞ்சியத்தான் ஓடை, மாணிக்கவாசகர் ஓடை, கல்லாறு ஓடை, உப்போடை மற்றும் பல சிறிய ஓடைகள் மருதையாறு ஆற்றின் முக்கிய துணை ஓடைகளாகும்.

மருதையாற்றின் மேற்பகுதியில், பெரம்பலூர் மாவட்டம் கொட்டரை கிராமத்தில் கொட்டரை நீர்த்தேக்கத் திட்டம் கட்டப்பட்டு வருகிறது மற்றும் அரியலூர் மாவட்டத்தில், புதிதாக கட்டப்படும் தடுப்பணையின் கீழ்பகுதியில், பொய்யூர் மற்றும் சுண்டக்குடி ஆகிய கிராமங்களில் இரு தடுப்பணைகள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளன.

**400 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்!**

அரியலூர் மாவட்டம் வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளில் உள்ளதால் நிலத்தடி நீரை மேம்படுத்தவும், அருகிலுள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் கிணறுகள் நீர் மட்டம் உயர்த்தவும், பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கை அடிப்படையில், மருதையாற்றிற்கு குறுக்கே வாரணவாசி கிராமத்தில் புதிய தடுப்பணை அமைக்கும் பணி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 15.11.2024 அன்று அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த போது அறிவிக்கப்பட்டு, மதிப்பீடானது ரூ.24.36 கோடிக்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி, அரசாணை எண்:16 நீர்வளத் (எஸ்2) துறை நாள்: 11.04.2025 மூலம் பெறப்பட்டதை தொடர்ந்து, தொழில்நுட்ப அனுமதி நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம், திருச்சி அவர்கள் மூலம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால் சுமார் 400 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு மறைமுக நீர்ப்பாசனம் கிடைக்கப்பெறுகிறது. இதன் மூலம் அருகிலுள்ள 69 கிணறுகளின் நீர்மட்டம் உயர்வதுடன், குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளின் பயன்பாட்டிற்கு உதவுகிறது. மேலும், இப்பகுதியில் தடுப்பணை அமைக்கப்படுவதால் அதனை சுற்றியுள்ள பகுதியின் ஒரு கி.மீ சுற்றளவிற்கு நிலத்தடி நீர்மட்டம் செறிவூட்டப்படும்.

இப்புதிய தடுப்பணையின் நீளம் 250.00 மீட்டர் மற்றும் உயரம் 1.50 மீட்டர் ஆகும். 3.20 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டதாகும். மேலும். 9.60 மில்லியன் கனஅடி சராசரி ஆண்டு கொள்ளளவு ஆகும். அதிகபட்ச வெள்ளநீர் வெளியேற்றும் திறன் 39850 கனஅடி கொண்டதாகும். மக்களின் தேவையறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு திட்டங்களை அரியலூர் மாவட்டத்திற்கு வழங்கி வருகிறார். இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், அரியலூர் மருதையாறு வடிநில கோட்டம் நீர்வளத்துறை செயற்பொறியாளர் பாண்டியன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, உதவி செயற்பொறியாளர் மருதமுத்து, உதவிசெயற்பொறியாளர்கள் திவ்யபிரியா, அரவிந்தன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திர சேகரன், ஒன்றிய பொறுப்பாளர் இரா. கென்னடி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிர வன், தொமுச செயலாளர் பி.வி. அன்பழகன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதி மசினகுடி ஊராட்சிக்கு உட்பட்ட குழந்தை இயேசு சர்ச் மைதானத்தில் நடைபெற்ற, ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்புத் திட்ட முகாமினை தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, முகாமில் உடனுக்குடன் தீர்வு காணப்பட்ட மனுக்களை ஆராய்ந்து மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கினார். உடன் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) சிவசங்கர், வட்டாட்சியர் குணவதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சலீம், சுப்ரமணியம் மற்றும் தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் மு.திராவிட மணி, கூடலூர் ஒன்றியச் செயலாளர் உத்தமன், கூடலூர் ஊராட்சி முன்னாள் தலைவர் கீர்த்தனா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (26.09.2025) பள்ளிக்கல்வித்துறையின் கீழ் செயல்படும் பொது நூலக இயக்கத்தின் சார்பில் சேலம் மாவட்டம், ஓமலூர், வெற்றிலைக்காரனூர் பகுதியில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலக கட்டடத்தினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் உள்ளனர்.




புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கே.ராசியமங்களம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 24.09.2025 அன்று திறந்து வைத்தார்கள்.